


# ஜீலை 6 - புனித மரிய கொரெற்றி (1890 – 1902)

இவளுடைய பெற்றோர் ஏழைகள். இவளைப் படிக்க வைக்க பெற்றோருக்கு வசதி இல்லை என்றாலும் எழுதப்படிக்க தெரியாத இவளுடைய தாய் இவளுக்கு சிறந்த கிறிஸ்தவ பயிற்சி அளித்தாள். இவளுக்கு ஒன்பதாவது வயதில் வேறோர் ஊருக்குச் சென்றனர். அடுத்த ஆண்டில் தந்தை இறந்தார். தாய் கூலி வேலை செய்யப் போவாள். அப்பொழுது மரியா சிறு பிள்ளைகளைக் கவனித்துக் கொள்வாள். 11வது வயதில் புது நன்மை வாங்கினாள். அதிலிருந்து கீழ்ப்படிதல், அடக்க ஒடுக்கம், கற்பு இவற்றை சிறந்த விதமாக அனுசாரித்தாள். சிறு பாவத்தாலும் இயேசுவை மனம் நோகச் செய்யமாட்டாள்.

பாவசங்கீர்த்தனம் செய்ய 14 மைல் தூரம் நடப்பாள். அடுத்த வீட்டில் கெட்ட வாலிபன் ஒருவன் இருந்தான். இவளைக் கெடுக்க அவன் மும்முறை முயன்றான். இவள் இணங்காததால் கோபாவேசம் கொண்டு பதினான்கு முறை இவளை கத்தியால் குத்தினான். மறுநாள் மரியா இறந்தாள். சாகுமுன், தன்னைக் கொலை செய்தவனுக்கு மன்னிப்பு அளித்தாள். அவன் மனந்திரும்பும்படி செபித்தாள். கொலைகாரனை அவ்வு ர் மக்கள் தோலை உரித்துக் கொல்ல தீர்மானித்தனர். அவன் தப்பித்துக் கொண்டான். கொலைக் குற்றத்திற்றாக இருபத்தொன்பது ஆண்டுகள் சிறையிலிருந்தான். முற்றிலும் மனந்திரும்பி விட்டான். தான் மனந்திரும்பக் காரணம், தான் கொன்ற மரிய கொரெற்றியை காட்சியில் கண்டதே என அவன் கூறினான். இவளுக்கு முத்திப்பேறு பெற்ற பட்டம் அளிக்கும் போது இவளுடைய தாயும் சகோதரனும், இரு சகோதரிகளும் வந்திருந்தனர். இவளைக் கொன்றவனும் வந்திருந்தான். இவளுடைய தாயை பாப்பானவர் பாராட்டிப் பேசினார்.

**சிந்தனை:** கிறிஸ்தவ குடும்பங்களில் காலையிலும் மாலையிலும் உணவருந்தும் நேரத்திலும் அனைவரும் ஒன்று சேர்ந்து செபித்து தூய வாழ்வு வாழ்வதற்கான வரத்தைப் பெறுவோம்.

**செபம்:** புனித மரியகொரெற்றி, கற்பென்னும் வரத்தை எங்கள் அனைவருக்கும் பெற்றுத் தாரும்.